தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 04 ஆகஸ்ட் 2010

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் திட்டத்தின் நான்காண்டு சாதனைகள்...

> முதன்முறையாக வேலை தரும் நிறுவனங்களுக்கும் வேலை தேடும் இளைஞர்களுக்கும் இடையே மகளிர் திட்டம் ஒரு பாலமாக செயல்பட்டு வருகின்றது இந்த அணுகுமுறை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக செயல்படுத்தப்படுகிறது

டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

இளைஞர்களின் திறனை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தும் வண்ணம், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு ஏற்ற தொழிற்பயிற்சியினை அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி ஏழ்மையை போக்கிடும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களின் மூலமாக 2006 -07 நிதியாண்டு முதல் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. வேலைவாய்ப்பு முகாம் குறித்தத் தகவல்கள் தொலைக்காட்சி, செய்தித் தாள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கக் கூட்டங்கள் வாயிலாக அனைத்து கிராமப்புற இளைஞர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

ஊராட்சி அளவில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், இளைஞர்களை ஒன்று திரட்டி முகாமில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்கின்றன. முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள், அவரவர் தகுதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, விண்ணப்பங்களை அளிக்கின்றனர்.

நிறுவனப் பிரதிநிதிகள், தகுதியுடைய நபர்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான ஆணையை வழங்குகின்றார்கள். வாழ்ந்து காட்டுவோம் மற்றும் மகளிர் திட்டங்கள், முதன்முறையாக வேலை தரும் நிறுவனங்களுக்கும், வேலை தேடும் இளைஞர்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வருகின்றன. இந்த அணுகுமுறை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இளையோர் இவ்வாய்ப்புகளை பயன்படுத்தி, வேலைவாய்ப்பினை பெற்று, ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றிட வாழ்த்துகிறேன்!

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

மணிமேகலை விருது பெற்ற ரோஜா மலர் மகளிர் சுய உதவிக் குழு » 5

உள்கடன் பெற்று தனியாக நிலம் சாகுபடி, கால்நடைகள் வளர்த்தல், தையல் ஆகிய தொழில்களையும் இக்குழுவின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வருவாய் ஈட்டுவதுடன், ஒற்றுமையுடன் குழு நிர்வாகத்தையும் முறையாக நடத்தி வருகின்றனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை உயர்வு » 11

மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்யும் இயல்பான நிலையில் உள்ளவர்களை ஊக்குவிக்க திருமண நிதியுதவித் திட்டம், 1986ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மேலும் ஒரு மாற்றுத் திறனாளியை மற்றொரு மாற்றுத் திறனாளி திருமணம் செய்து கொண்டாலும்...

வெற்றியை நோக்கி ஒரு பயணம் » 12

22

பெண்களை தாக்கும் நோய்கள்

24

வளர்க வணிகம்

26

இணைவோம், உழைப்போம், வளர்வோம்
முனைவோம், முயல்வோம், உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 04 ஆகஸ்ட் 2010

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

ஆசிரியர் குழு
திரு. கோ. காந்தி காளிதாசன்
முதுநிலை மேலாளர் - கணினி

திருமதி. கா. காளத்தி
திட்ட ஒருங்கிணைப்பாளர், டி.என்.வி.ஆர்.சி.,

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்,

உதவி ஒருங்கிணைப்பாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.

தொலைபேசி: 044-2230 1801,
4202 7635

தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர்
நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன்
வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

இயற்கையை காப்போம்...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

ஆகஸ்ட் மாதம் என்றாலே இந்திய நாட்டின் சுதந்திரம்தான் அனைவருக்கும் நினைவில் வரும். வேற்று நாட்டினருக்கு அடிமைப்பட்டிருந்த இந்த நாடு, பல தியாகிகளின் தன்னலமற்ற கடுமையான போராட்டத்தினால் சுதந்திரம் பெற்றது. அந்த தியாகிகளுக்கு தலை வணங்குவோம். அனைவரும் சுதந்திர தின வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்வோம்.

அனைத்து அம்சங்களிலும் சுதந்திரம் பெற்ற மனிதன் தான் மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடத்த முடியும். சுதந்திர உணர்வில்லாமல் அடிமை சிந்தனையுடன் வாழும் யாரும் பாதுகாப்பு இல்லாத உணர்வுடனும், பயத்துடனும்தான் வாழ முடியும். வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் வாங்கி விட்டோம். ஆனால் நமக்குள் நம்மவர்களையே அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நிலை மாற்றப்பட வேண்டும்.

பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தி வைத்திருப்பதும், சாதியின் பெயரால் ஒரு பிரிவின் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதும், மொழியின் பெயரால் ஒரு சமூகத்தை அடிமைப்படுத்தி வைத்திருப்பதும் சுதந்திர உணர்வுக்கு எதிரானதாகும். ஒரு மனிதனுக்கு அரசியல் சுதந்திரம் மட்டுமே போதாது. பொருளாதாரம், கல்வி, கலாச்சார சுதந்திரமும் அவசியமாகிறது. சுதந்திர நாளை கொண்டாடும் இத்திங்களில் மனிதர்களின் அடிமனதிலிருக்கின்ற அடிமைதனை அகற்றிட உறுதியினை ஏற்போம்.

ஆடி மாதம் பிறந்து விட்டது. எங்கும் பச்சை பசேலென்று காட்சியளிக்கத் தொடங்கி விட்டது. கரை புரண்டு ஓடும் காவிரி ஆற்றங்கரையில் மக்கள் ஆடிப்பெருக்கை ஆர்வமுடன் கொண்டாட ஆரம்பித்து விட்டனர். நிலங்களை உழுவது, விதை விதைப்பது, மரங்கள் நடுவது, வீட்டு தோட்டங்களை உருவாக்குவது போன்று பசுமையான செயல்பாடுகளை செய்கின்ற மாதம் இது.

அறிவியல் வளர்ச்சியும், நவீன மாற்றங்களும் இயற்கையை முழுவதுமாக அழித்து விடுமோ என்ற பயம் மேலோங்கி வருகிறது. இயற்கையை பாதுகாப்பது அனைவரின் முக்கிய கடமையாகும்.

இயற்கையின் அழிவால் இன்று பூமி வெப்பமடைந்து பருவநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதன் விளைவாக மனிதகுலம் மாபெரும் ஆபத்துக்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையை ஒவ்வொருவருக்கும் உணர்த்தும் மாதம் இந்த ஆடி மாதம்.

இயற்கை அன்னையை பாதுகாப்பதற்கு நாம் எவ்விதமான முயற்சிகளை மேற் கொள்ள போகின்றோம் என சிந்திக்கும் நேரம் வந்து விட்டது. மரங்களை நடுவது, புகையைக் கட்டுப்படுத்துவது, மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றை சிக்கனப்படுத்துவது, ஆடம்பரங்களை குறைத்துக் கொள்வது போன்ற செயல் களை செய்ய வேண்டும் என ஒவ்வொருவரும் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும். சிறு துளி பெருவெள்ளம் என்பது பழமொழி. சுய உதவிக் குழுவை சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் செய்யும் சிறு சிறு செயல்கள் கூட இயற்கையை பாதுகாக்கும் என்பதை புரிந்து நம்மால் முடிந்ததை செய்வோம்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

முற்றம் இதழுக்கு பாராட்டு!

செம்மொழியான தமிழ் மொழியே... உலகத் தமிழ் செம்மொழி மாநாடு முத்திரைக்குப் பக்கத்தில் நம்மையெல்லாம் காக்கும் நம்தாய் (தமிழ்த்தாய்) என்று குறிப்பிட்டிருந்த அட்டைப்படம் மிகவும் அருமை. படங்களெல்லாம் பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. கோவைக்குச் சென்று நேரில் பார்த்த மகிழ்ச்சி எங்களுக்கெல்லாம். குழு உறுப்பினர்கள் அனைவரும் உட்கார்ந்து உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நிகழ்ச்சிகளைப் படித்து தெரிந்து கொண்டோம்.

திருமதி. செல்வி விஜயன்,
கலைமகள் மகளிர் சுய உதவிக் குழு,
காங்கேய நல்லூர், வேலூர்.

தொலைபேசி வழியே முற்றம் இதழுக்கு வாழ்த்துகள்

மிகவும் பயனளிப்பவை...

2010 ஜூலை மாத முற்றம் இதழ் பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய இதழாகும். பயனுள்ள கட்டுரைகளும், அரசு நலத் திட்டங்கள் குறித்த செய்திகளும் மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன. தமிழ் மூதாட்டி அவ்வையார் குறித்த கட்டுரையும், உடல் நலம் குறித்த கட்டுரையும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாடுகளும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விபரமும் எங்களுக்கு மிகவும் பயனளிப்பவையாக உள்ளன.



www.tamilnaduwomen.org/murtram

திருமதி. கற்பகம் நெடுஞ்செழியன்
அன்னை பூமி மகளிர் மன்றம்,
மேட்டுத் தெரு, சேலம்.

மேன்மைக்கு வழிகாட்டி

முற்றம் மாத இதழை படித்தேன். மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தேன். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பயிற்சி மற்றும் கடனுதவி பெற்று தொழில் செய்து மேன்மை அடைய வழிகாட்டி உள்ளீர்கள். நாட்டுக்கோழி வளர்ப்பு - மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவது போன்ற சிறந்த சேவைகளை செய்து ஏழைகளின் வாழ்வில் வறுமை இருளை அகற்றிட வழிவகுத்து வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பணி பாராட்டிற்குரியது.

எஸ். கே. வேல்பாண்டியன்,
காமாட்சிபுரம்,
தேனி மாவட்டம்

"மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி."

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com ■ wdcmutram@gmail.com

விருதுநகர் மாவட்டம்

பிளாசம் முல்லை மகளிர் சுய உதவிக் குழு

2,25,000 ரூபாயினைக் கொண்டு மரப் பொருட்கள், அழகிய சாவிக் கொத்துக்கள் மற்றும் பல்வேறு விதமான பரிசுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர்.

விருதுநகர் மாவட்டம், தந்திமரத் தெரு பகுதியில் பிளாசம் முல்லை மகளிர் சுய உதவிக் குழு கடந்த 1999ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்குள் ஒற்றுமையாகவும், உற்சாகத்துடனும் செயல்பட்டு தங்கள் குழுவினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் உறுதுணையாக உள்ளனர்.

வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி, தவறாது சேமித்து வந்தனர். குழுவிற்கு கிடைத்த சுழல் நிதியினைக் கொண்டு தங்களுக்குள் உட்கடன் பெற்றுக் கொண்டனர். மகளிர் திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் பல்வேறு பயிற்சிகளையும் பெற்று, அதற்கேற்ப தொழில்களை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

வங்கியில் நேடிக் கடனாக பெற்ற 2,25,000 ரூபாயினைக் கொண்டு மரப் பொருட்கள், அழகிய சாவிக் கொத்துக்கள் மற்றும் பல்வேறு விதமான பரிசுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர்.

மேலும் மகளிர் திட்டத்தின் மூலம் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் நடைபெறும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகளிலும் கலந்து கொண்டு தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

பொருளாதார ரீதியாக வெற்றி பெற்று வரும் இக்குழுவினர், ஏழைக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவுதல், தாங்கள் வசிக்கும் பகுதியின் மேம்பாட்டிற்குத் தேவையான உதவிகளை செய்தல், சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் போன்றவை குறித்தும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோருக்கு உதவித் தொகை பெற்றுத் தருதல், போலியோ சொட்டு மருந்து குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

மகளிர் திட்டத்தின் மூலம் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் நடைபெறும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகளிலும் கலந்து கொண்டு தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மணிமேகலை விருது பெற்ற

ரோஜா மலர் மகளிர் சுய உதவிக் குழு

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோவில் வட்டாரம், திருச்சம்பள்ளி ஊராட்சி வடக்குத் தெருவில் 2001ஆம் ஆண்டு முதல் ரோஜா மலர் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. வாழ்வில் முன்னேற்றம் அடைந்தே தீருவது என்ற கனவோடு உருவாக்கப்பட்ட இக்குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி சேமிக்கத் துவங்கினர்.

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றபின், சுழல் நிதி, பொருளாதாரக் கடன் மற்றும் நேரடிக் கடன் ஆகியவைகளைப் பெற்று சானிடரி நாப்கின் தயாரிக்கும் தொழிலை குழுவாக மேற்கொண்டு வருகின்றனர். தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பெண்கள் பள்ளிகள், கல்லூரிகள், சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்துக் கடைகளில் நேரடியாக விற்பனை செய்து வருவாய் ஈட்டுவதுடன், வங்கியில் பெற்றக் கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மேலும் உள்கடன் பெற்று தனியாக நிலம் சாகுபடி, கால்நடைகள் வளர்த்தல், தையல் ஆகிய தொழில்களையும் இக்குழுவின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வருவாய் ஈட்டுவதுடன், ஒற்றுமையுடன் குழு நிர்வாகத்தையும் முறையாக நடத்தி வருகின்றனர்.

எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி, நுகர்வோர் பேரணி, சுதந்திர தினம், குடியரசு தினம், போலியோ சொட்டு மருந்து முகாம்களில் கலந்து கொள்ளுதல், யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரைகள் வழங்குதல் போன்ற சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தங்கள் பகுதியில் பயிற்சிக் கூடம் கட்டுவதற்காக ரூ. 20000/– செலவில் நிலம் வாங்கியுள்ளனர்.

பள்ளிக் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் வழங்குவது, ஏழை மாணவர்களுக்கு உதவுவது, தெருக்களை சுத்தம் செய்வது போன்ற சமூக நல மேம்பாட்டு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தங்களின் குழுவினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வரும் ரோஜா மலர் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு பெருமை சேர்க்கும் வண்ணம் அக்குழுவிற்கு மணிமேகலை விருது வழங்கப்பட்டுள்ளது இக்குழுவின் வெற்றிப் பணயத்தில் ஒரு மைல் கல் எனலாம். ■

மகளிர் திட்டம் மூலம் உறுப்பினர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி போன்றவைகளும், சானிட்டரி நாப்கின் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சிகளும் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டது.

மகளிர் திட்டத்தின் நான்காண்டு சாதனைகள்...

மகளிரின் வாழ்வு சிறந்திட, மங்கள வாழ்வு பெற்றிட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று மகத்தான வெற்றியினை பெற்றுள்ளது. தற்போது ஏறத்தாழ 4.69 இலட்சம் சுய உதவிக் குழுக்களுடன் சுமார் 73.65 இலட்சம் உறுப்பினர்களோடு மாநிலம் தழுவிய ஓர் மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. இவர்களின் மொத்த சேமிப்பு ரூ. 2,568 கோடியாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தீட்டப்பட்ட திட்டங்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் ஆக்கமிகு ஆலோசனைகளும், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் வழிகாட்டுதல்களும், மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் அயராத பணியினாலும் அன்று ஆடுதாண்டும் காவிரியாக இருந்த சுய உதவிக் குழு இயக்கம் இன்று அகண்ட காவிரியாக மாறி, மகளிரின் வாழ்வில் மங்கள ஒளியேற்றி வருகிறது என்பது கண்கூடு.

பல்வேறு தொழிற்பயிற்சிகள், கடன் உதவிகள், வேலை வாய்ப்புகள், தொழில் அமைப்புகள் என அரசின் திட்டங்களினால் சுய உதவிக் குழுக்கள் சாதனைகள் பலவற்றை படைத்து வருகின்றன. குறிப்பாக கடந்த நான்காண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கண்டுள்ள வளர்ச்சியை முற்றம் தனது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

புதிய சுய உதவிக் குழுக்கள்

கடந்த நான்காண்டுகளில் 1.53 இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் 22.67 இலட்சம் மகளிரை உறுப்பினராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் உள்ள ஏழை எளியோர் மற்றும் நலிவுற்ற பிரிவினரை சுய உதவிக் குழுக்களில் இணைக்கும் வகையில் ஊரகப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள், நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மகளிர் மற்றும் மாற்றுத் திறன் கொண்டோருக்கான குழுக்கள் அமைக்க முக்கியத்துவம் தரப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பெண் தொழிலாளர்கள், நகர்ப்புற குடிசை வாழ் மகளிர், மாற்றுத்திறனாளிகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பிற என ஏறத்தாழ 1,53,182 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுழல் நிதி

சுய உதவிக் குழுக்களின் தொகுப்பு நிதியை பெருக்கவும், அவை வங்கிக் கடன் பெறத் தகுதியடைய ஏதுவாகவும் சுழல் நிதி வழங்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்குப் பிறகான தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெறத் தகுதி பெறுகின்றன. கடந்த காலங்களில் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமையால் அதிகமான சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெறக் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

2006–07 முதல் 2009–10 வரையிலான நான்கு ஆண்டுகளில் 3,15,432 குழுக்கள் மொத்தம் ரூ. 1,635.56 கோடியினை சுழல் நிதி யாகப் பெற்றுள்ளன. இதில் ரூ. 370.70 கோடியினை சுழல் நிதியாகப் பெற்றுள்ளன. இதில் ரூ. 370.70 கோடி மானியமாகவும், ரூ. 1,264.86 கோடி வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டது. மாண்புமிகு துணை முதல் வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் பலமுறை பயணம் செய்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களுக்குத் தாமே நேரடியாக சுழல் நிதி வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2006–07ஆம் நிதியாண்டிற்கு முன்னதாக நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்க திட்டம் ஏதுமில்லை. எனவே 2006–07ஆம் ஆண்டில் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழுக்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றிட, அவற்றை ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் கூட்டமைப்புகளாக ஒருங்கிணைப்பது அவசியமாகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம்.

2002ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில் மாநிலத்தில் மொத்த முள்ள 12,618 ஊராட்சிகளிலும் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த கூட்டமைப்புகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதால் 2008ஆம் ஆண்டில் அவற்றை அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு உத்தரவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,896 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டன.

வங்கிக் கடன் பெற ஏதுவாக மறுசீரமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் ‘சங்கங்களாக’ பதிவு செய்திட அரசு உத்திரவிட்டது. சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு 2009–10ஆம் ஆண்டு முதல் தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்க நிதியாக அறிவித்து, அதற்கென அரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 2009–10ஆம் நிதியாண்டில் 1,000 ஊாட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்க நிதி வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கிய மான பொறுப்புகளில் ஒன்று நிதியிடையீட்டாளர் பணியாகும். தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் வங்கியிலிருந்து பெருங்கடன் பெற்று தங்களது உறுப்பினர் குழுக்களுக்கு கடன் வழங்கலாம். 2009–10ஆம் ஆண்டில் 251 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூ. 62.52 கோடி பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர் களிடையே ஒற்றுமை மற்றும் அணிப்பற்றினை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அட்டைப்படக் கட்டுரை

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களுக்குத் தாமே நேரடியாக சுழல் நிதி வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் வங்கித் தலைவர்களுடன் நடத்திய கூட்டத் திற்குப் பின் வங்கிகள் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கும் வங்கிக் கடன் தொகையினை ரூ. 50,000/– ஆக உயர்த்தி மொத்த சுழல் நிதி ரூ. 60,000/– வழங்கி வருகின்றன.

நிதி மான்யம் வழங்கும் ஓர் புதிய திட்டத்தினை தமிழக அரசு அறிவித்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் 87,937 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 87.93 கோடி சுழல் நிதி மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெறுவதற்கு சுமார் ஆறு மாதம் முதல் நான்கு வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. தற்போது தமிழக அரசு சுழல் நிதி வழங்கிட அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருவதால், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றவுடன் சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெறக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

கடன் இணைப்பு

2008–09ஆம் ஆண்டிற்கு முன்னர் சுழல் நிதி மான்யம் ரூ. 10,000/– உடன் கடன் தொகை ரூ. 15,000/– சேர்த்து மொத்தம் ரூ. 25,000/– சுழல் நிதியாக வங்கிகள் வழங்கி வந்தன. இது அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களின் கடன் தேவையினைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் வங்கித் தலைவர்களுடன் நடத்திய கூட்டத்திற்குப் பின் வங்கிகள் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கும் வங்கிக் கடன் தொகையினை ரூ. 50,000/– ஆக உயர்த்தி மொத்த சுழல் நிதி ரூ. 60,000/– வழங்கி வருகின்றன. மேலும், மறு கடன் தொகைக்கான வரம்பினைக் கீழ்க்கண்டவாறு உயர்த்தியும் வழங்க வங்கிகள் இசைந்துள்ளன. இரண்டாவது இணைப்பு குறைந்தபட்சம் ரூ. ஒரு இலட்சம், மூன்றாவது இணைப்பு குறைந்தபட்சம் ரூ. 1,50,000/–, நான்காவது மற்றும் அதனைத் தொடர்ந்த கடன் இணைப்புகள் சுய உதவிக் குழுக்களின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது.

2006–07ம் ஆண்டு 593.45 கோடி, 2007–08ம் ஆண்டு 804.70 கோடி, 2008–09ம் ஆண்டு ரூ. 2,174.57 கோடி மற்றும் 2009–10ம் ஆண்டு ரூ. 2,791.65 கோடியும் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர் தொழிற்திறன் பயிற்சி

மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர் தொழிற் பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 1,22,580 இளைஞர்களுக்கு எம்.ஆர்.எப்., நோக்கியா, செயிண்ட் கோபைன் போன்ற மிகச் சிறந்த தொழிற் நிறுவனங்களின் மூலம் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 67,842 இளைஞர்கள் நல்ல வருவாயுடன் கூடிய வேலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஓட்டுநர் பயிற்சி, தானியங்கி, கணினிப் பயிற்சி, வன்பொருள், மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைப் பயிற்சி, ஆயத்த ஆடைகள் மற்றும் துணி, கட்டுமான உபகரணங்கள், மின்னணு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பிற தொழில்களில் 2006–07ம் ஆண்டு முதல் 2009–10ம் ஆண்டு வரை 1,22,580 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்துதல்

கடந்த நான்காண்டுகளில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்திட அரசு கீழ்க்கண்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்திட ரூ. 15.32 கோடி மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நிரந்தர வணிக வளாகம் கட்டப்பட்டு பணி முடிவு பெறும் நிலையில் உள்ளது. ரூ. 13.50 கோடி மதிப்பீட்டில் (மாவட்டத்திற்கு மூன்று வீதம்) 90 கிராமச் சந்தைகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்த கண்காட்சி அட்டவணை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படுகிறது. 2009–10ஆம் ஆண்டில் மாநில அளவில் இரண்டு, மாவட்ட அளவில் 60, வட்ட அளவில் 125 விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு மொத்தம் ரூ. 17.53 கோடி அளவிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

வங்கியாளர் விருது

சுய உதவிக் குழு மகளிருக்கு சிறந்த முறையில் அதிக அளவு வங்கிக் கடன் வழங்கிய வங்கி மற்றும் வங்கிக் கிளைகளையும் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு, மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கி மற்றும் வங்கிக் கிளைகளுக்கான விருதுகளைத் தோற்றுவித்துள்ளது. மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் ஒரு வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகளுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 1,22,580 இளைஞர்களுக்கு எம்.ஆர்.எப்., நோக்கியா, செயிண்ட் கோபைன் போன்ற மிகச் சிறந்த தொழில் நிறுவனங்களின் மூலம் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 67,842 இளைஞர்கள் நல்ல வருவாயுடன் கூடிய வேலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது.

ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2007–08ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பத்து சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் 25.11.2008 அன்று சென்னையில் வழங்கினார். அதைப் போலவே 2008–09ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான மணிமேகலை விருதுகளை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் 16.11.2009 அன்று சென்னையில் வழங்கினார்.

மணிமேகலை விருது

சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை 2006–07ஆம் ஆண்டு அரசு தோற்றுவித்தது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாநில அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பரிசுத் தொகையாக ரூ. 3 இலட்சமும், சிறந்த சுய உதவிக் குழுக்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ. 1 இலட்சமும் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்குப் பரிசுத் தொகையாக ரூ. ஒரு இலட்சம் மற்றும் சிறந்த சுய உதவிக் குழுவிற்கு பரிசுத் தொகையாக ரூபாய் 25,000/–ம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2007–08ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பத்து சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் 25.11.2008 அன்று சென்னையில் வழங்கினார். அதைப் போலவே 2008–09ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான மணிமேகலை விருதுகளை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் 16.11.2009 அன்று சென்னையில் வழங்கினார்.

மகளிர் குழு கூட்டமைப்புகளும், சுய உதவிக் குழுக்களும், அவைகளின் உறுப்பினர்களும் அடைந்துள்ள வெற்றிகளும், படைத்துள்ள சாதனைகளும் மங்கையர் வாழ்வில் மங்காத பெருமையினை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது. மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று சாதனைகள் பல படைத்து வெற்றிகரமாக திகழ வாழ்த்துகள். ■

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 20 ஆயிரத்தில் இருந்து ரூ. 25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

'தமிழகத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 584 சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் சுழல் நிதி வழங்கப்பட்டு உள்ளது. பல விழாக்களில் பங்கேற்று மேடையில் நின்று அனைத்து குழுக்களுக்கும் நானே சுழல் நிதி வழங்கி இருக்கிறேன். அதற்காக 89 மணி நேரம் செலவழித்து உள்ளேன்.

தமிழ் வழியில் பயின்ற இருவருக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணைகள்

– மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். இந்த வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், தமிழில் கல்வி பயின்ற சென்னையைச் சேர்ந்த திரு. பேதுரு என்பவர், சென்னை உயர்நீதிமன்ற அரசு குற்றத்துறை தலைமை வழக்கறிஞர் அலுவலகத்தில் நகல் பெருக்கியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதற்கான பணி நியமன ஆணையினை 09.07.2010 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மேலும் நிறைவேற்றும் வகையில் தமிழில் கல்வி பயின்ற சென்னையைச் சேர்ந்த திரு. ஏ. ரஜினி, திருமதி. புஷ்பமணி ஆகியோருக்கு சென்னை உயர்நீதிமன்ற அரசு குற்றத்துறை தலைமை வழக்கறிஞர் அலுவலகத்தில் உதவியாளர்களாக பணியாற்ற பணி நியமன ஆணைகளை 28.07.2010 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். ■

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குவதற்காக 89 மணி நேரம் செலவழித்து உள்ளேன்

– மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்கள் பேச்சு

தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் முடிவடைந்த பணிகளுக்கான திறப்பு விழா ஆகியவை தூத்துக்குடி புதிய பஸ் நிலையம் அருகே நடைபெற்றது. மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். விழாவில் அவர் பேசியதாவது, 'தமிழகத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 584 சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் சுழல் நிதி வழங்கப்பட்டு உள்ளது. பல விழாக்களில் பங்கேற்று மேடையில் நின்று அனைத்து குழுக்களுக்கும் நானே சுழல் நிதி வழங்கி இருக்கிறேன். அதற்காக 89 மணி நேரம் செலவழித்து உள்ளேன். அதுபற்றி பலர் என்னிடம், 'எப்படி இவ்வளவு பொறுமையாக மேடையில் நின்று வழங்குகிறீர்கள்' என்று கேட்டனர். அதற்கு நான் அளித்த பதில் என்னவென்றால், சுழல் நிதி வாங்கும் தாய்மார்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சி, அவர்கள் தலைவர் கலைஞரை பணிவுடன் விசாரிக்கும் விதம் ஆகியவை என் சோர்வை போக்கி சுறுசுறுப்பாக்கின. அதனால்தான் அத்தனை பேருக்கும் வழங்க முடிந்தது' என்றேன், என்று கூறினார். ■

மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை உயர்வு

– முதல்வர் டாக்டர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

மாற்றுத்திறனாளிகளை திருமணம் செய்யும் இயல்பான நிலையில் உள்ளவர்களை ஊக்குவிக்க திருமண நிதியுதவித் திட்டம், 1986ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மேலும் ஒரு மாற்றுத் திறனாளியை மற்றொரு மாற்றுத் திறனாளி திருமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம் 2009ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 20 ஆயிரத்தில் இருந்து ரூ. 25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுவாக திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் மணமகளின் பெற்றோருக்கு மட்டுமே நிதியுதவித் தொகை, வருமான உச்சவரம்புக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. ஆனால் மாற்றுத் திறனாளிகள் நலன் கருதி வருமான உச்ச வரம்பு இத்திட்டத்தின் கீழ் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உதவித் தொகை திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ, 12,500/– ரொக்கமாகவும், ரூ. 12,500/– தேசிய சான்றிதழ் பத்திரமாகவும் வழங்கப்படும். இத்திட்டத்தில் கூடுதலானோர் பயன் பெற முதல் அமைச்சர் அவர்கள் 1 கோடியே 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். ■

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்



அன்புள்ள சுய உதவிக் குழு சகோதர, சகோதரிகளே

வணக்கம். சென்ற பகுதியில் சுய உதவிக் குழுக்கள் மேற்கொள்ளும் தொழில்களின் அவசியத்தைப் பற்றி அறிந்து கொண்டோம். இப்பகுதியில் ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சிலவற்றை குறித்து அறியலாம்.

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது பின்வரும் விஷயங்களை கவனத்தில் கொண்டு தொழிலை ஆரம்பிக்க வேண்டும்.

1. அடிப்படை அனுபவம்
2. முதலீடு
3. இடம்
4. சந்தைப்படுத்துதல் வாய்ப்பு
5. இடைவிடாத முயற்சி

கோவையில் உணவகம் என்றால் நம் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பது ஸ்ரீ அன்னபூர்ணா குரூப்ஸ் உணவகங்கள் தான். இதன் உரிமையாளர் திரு. தாமோதரசாமி அவர்கள் அதனை எவ்வாறு ஆரம்பித்தார் என்று நாம் பார்த்தால் நம் அனைவரும் வியப்பின் உச்சிக்கே சென்று விடுவோம்.

திரு. தாமோதரசாமி அவர்களின் குடும்பம் பெரியது. மிகவும் ஏழ்மையான குடும்பம். அனைவரும் கோவையில் உள்ள ஒரு தனியார் ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். திரு. தாமோதிரசாமி அவர்கள் சமையலில் ஓரளவு நல்ல அனுபவம் பெற்றிருந்தார்கள். எனவே கோவையில் ஒரு நண்பர் மூலம் திரையரங்கு ஒன்றில் உணவகம் நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அத்தொழிலை சில காரணங்களால் தொடர முடியவில்லை.

பின்னர் கோவையில் உள்ள மற்றொரு திரையரங்கில் உணவகம் வைக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு கீரை வடையும், காபியும் விற்பனை செய்து வந்தனர்.

கீரை வடையும், காபியும் தனிச்சுவையுடன் இருந்ததால் மக்கள் கூட்டம் அலைமோதியது. படம் பார்ப்பதற்கு வரும் கூட்டத்தை விட கீரை வடையும், காப்பியும் சாப்பிட வந்த கூட்டம் அதிகமாக இருந்தது.

திரையரங்கின் சுற்றுச் சுவருக்கு வெளியில் இருந்த மக்களுக்கும் கீரை வடையும், காப்பியும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் திரையரங்க நிர்வாகம் இதனை விரும்பவில்லை. திரு. தாமோதரசாமி அவர்களை திரையரங்க நிர்வாகம் கண்டித்தது. உடனே அவர் தன் சகோதரர்களுடன் கலந்தாலோசித்து கோவை சென்ட்ரல் திரையரங்கு அருகில் ஒரு இடத்தை விலைக்கு வாங்கினார்.

பின்னர் திரையரங்கத்தில் நடத்தி வந்த உணவகத்தை அங்கிருந்து காலி செய்து தான் விலைக்கு வாங்கிய இடத்தில் சிறிய உணவகத்தை துவக்கினார்.

அங்கு காலை சிற்றுண்டி, மதியம் சாப்பாடு, காபி போன்ற அனைத்து உணவுப் பண்டங்களையும் தூய்மையாகவும், சுவைமிக்கதாகவும் தயாரித்து விற்பனை செய்யத் துவங்கினார். சுவையாகவும் சுகாதார மாகவும் உணவுப் பண்டங்கள் இருந்ததால் திரு. தாமோதரசாமி அவர்களின் உணவகம் மக்களிடையே நன்மதிப்பை பெறத் துவங்கியது. அச்சமயத்தில் அந்த உணவகத்தில் உணவு உண்பதற்காக சாதாரண மேசைகள் போடப்பட்டிருந்தன. வாடிக்கையாளர்கள் அந்த மேசையில் அமர்ந்து உணவு உண்ணும் போது கால் இடிக்கும். எனவே திரு. தாமே ாதிரசாமி அவர்கள் புதுமையான மேசைகளை வடிவமைத்தார். அந்த மேசைகளின் அடிப்பக்கத்தில் நடுவில் ஒரே ஒரு தாங்கல் இருக்கும். வாடிக்கையாளர்கள் காலை விருப்பம் போல் வைக்க அந்த தாங்கல் மிகவும் உதவியாக இருந்தது.

இவ்வாறு உணவகம் சிறிது சிறிதாக வளர்ந்தது. புதிய பணியாளர்கள் சேர்க்கப்பட்டனர். உணவகத்தில் ஒரு நாள் ஒரு மேசையில் 'சேவை இல்லை' என்ற பலகை வைக்கப்பட்டிருந்தது. அதை கவனிக்காமல் ஒரு பெரியவர் அந்த மேசையில் அமர்ந்து செய்தித்தாள் படித்த வண்ணம் அங்கிருந்த பணியாளரிடம் 'இந்தாப்பா ஒரு காப்பி கொண்டு வா' என்று கூறினார். அவர் காப்பி கொண்டு வரச் சொன்ன பணியாளர் இளைஞர் புதியதாக பணிக்கு சேர்ந்தவர். உடனே அந்த பணியாளர் 'அந்த மேசைக்கு காபி கொண்டு வர முடியாது, சேவை இல்லை என்ற பலகையை பாருங்கள்' என்று கூறினார்.

அந்த சமயத்தில் வேறு ஒரு பணியாளர் ஓடி வந்து அந்த இளைஞரிடம் 'ஐயோ இவர் நம் முதலாளி என்று தெரியாமல் கூறி விட்டாயே' என்று கூறினார். அவ்வாறு அமர்ந்து கொண்டு காபி கேட்ட பெரியவர் வேறு யாருமல்ல திரு. தாமோதரசாமி அவர்கள்தான். பாவம் புதியதாக வேலைக்கு சேர்ந்த அந்த இளைஞர் அவரை பார்த்திராததால் இந்த நிகழ்வு நடந்தது. உடனே அந்த இளைஞன் பய உணர்ச்சியுடன் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அவனை பார்த்த திரு. தாமோதிரசாமி அவர்கள் 'எங்கே போகிறாய்?' என்று கேட்டார். அந்த இளைஞர் உடனே அவரிடம் 'தாங்கள் தான் முதலாளி என்று தெரியாமல் அவ்வாறு நடந்து கொண்டேன். எனக்கு எப்படியும் வேலை போவது உறுதி, அதனால்தான் நானாகவே செல்கிறேன்' என்றார்.

உடனே திரு. தாமோதரசாமி அவர்கள் அந்த இளைஞரை தட்டிக் கொடுத்து அந்த உணவகத்தின் கண்காணிப்பாளராக நியமித்தார். இவ்வாறு இவரின் தலைசிறந்த மேலாண்மையால் உணவகம் சற்று வேகமாகவே வளர ஆரம்பித்தது. ■

(தொடரும்)

உடல் நலம் காப்போம்

மழைக் காலம் வந்து விட்டது. வீட்டில் உள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனை வரையும் மழைக்காலத்தில் தோன்றும் நோய்கள் தாக்கலாம். எனவே வரும் முன் காக்கும் வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு உடல் நலத்தைப் பேண வேண்டியது அவசியம்.

மழைக் காலத்தில் தண்ணீர் மூலம் பரவும் தொற்று நோய்களான வயிற்றுப் போக்கு, காலரா, டைபாய்டு, காமாலை போன்ற நோய்களும், கொசுக்கள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா நோய்களும் தாக்கும் வாய்ப்புள்ளது. எனவே மக்கள் அனைவரும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முன்னெச்சரிக்கையாக இருந்தால் பல நோய்களைக் கட்டுப்படுத்திவிட முடியும்.

நீரைக் காய்ச்சி பருக வேண்டும். சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் உணவுப் பொருட்களை உண்பதை தவிர்க்க வேண்டும். மழை நீர் தேங்கி சேறும் சகதியுமாக இருக்கும் இடங்களில் காலணி இன்றி நடக்கக் கூடாது. வீட்டின் தரை குளிர்ச்சியாக இருப்பதால் சளி பிடிக்க அதிக வாய்ப்பு உண்டு. எனவே வீட்டில் பயன்படுத்த ரப்பர் காலணிகளை அணிந்து நடக்க வேண்டும்.

வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் உப்பு கரைசல் நீரைப் பருகலாம். பின்னர் உடனடியாக அருகில் உள்ள அரசு துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம். தக்க மருத்துவரின் ஆலோசனையின்றி நாமே மருந்துக் கடைகளில் மருந்தோ அல்லது மாத்திரைகளையோ வாங்கிச் சாப்பிடக் கூடாது, ■

திருவள்ளூர் மேலாண்மை இயக்குநர் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

திருவள்ளூர் பூமாலை வணிக வளாகத்தில் அன்னை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நடத்தி வரும் கீதம்ஸ் ரியா என்ற அழகு நிலையத்தை மேலாண்மை இயக்குநர் அவர்கள் பார்வையிட்டார். அங்கு இருந்தவர்களிடம் அழகு நிலையத்தின் செயல்பாடுகள், வருவாய் போன்ற பல்வேறு விபரங்களை கேட்டறிந்தார். மேலும் இத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார். ■

பல்வேறு வண்ணக் குடைகளை உற்பத்தி செய்யும் பாலவிளை மற்றும் பாரதி ஆகிய சுய உதவிக் குழுக்களை பார்வையிட்டு, அக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம், விற்பனை போன்ற விபரங்களை கேட்டறிந்தார்.

கன்னியாகுமரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டு, புதிய குழுக்கள் அமைத்தல், சுழல் நிதி, பொருளாதாரக் கடன், இளைஞர் தொழிற்திறன் பயிற்சி மற்றும் உற்பத்திப் விற்பனைக்கு ஆவண செய்தல் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, தக்க ஆலோசனைகளை வழங்கினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிர் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திரு.ராஜேந்திர ரதனு, இ.ஆ.ப., வாழை நாரில் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் பண்டாரக்காடு சுய உதவிக் குழு, பல்வேறு வண்ணக் குடைகளை உற்பத்தி செய்யும் பாலவிளை மற்றும் பாரதி ஆகிய சுய உதவிக் குழுக்களை பார்வையிட்டு, அக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம், விற்பனை போன்ற விபரங்களை கேட்டறிந்தார். மேலும் கார்த்திகை வடலியில் செயல்பட்டு வரும் விடிவெள்ளி மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தி வரும் நியாய விலைக்கடையை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். வடசேரியில் உள்ள பூமாலை வணிக வளாகத்தை பார்வையிட்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள கடைகளை ஆய்வு செய்தார். ■

திருநெல்வேலி

விற்பனைக் கண்காட்சி

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆனித் தேரோட்ட திருவிழாவினை முன்னிட்டு, நெல்லை மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை கண்காட்சி டவுன் தாமரைக்குளம் மைதானத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டுத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் கண்காட்சியை திறந்து வைத்தார்கள். விழாவிற்கு மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. க. முத்து மீனாள் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இக்கண்காட்சியில் திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் விற்பனை அரங்குகள் அமைத்திருந்தன. ஆயத்த ஆடைகள், அலங்காரப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், பத்தமடை பாய் வகைகள், உணவுப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், பரிசு பொருட்கள், மூங்கில் பொருட்கள் மற்றும் சணல் பொருட்கள் போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சி நிறைவு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். மாலைராஜா, வணக்கத்திற்குரிய நெல்லை மாநகரத் தந்தை திரு. அ. லெ. சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டுத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்த சுய உதவிக் குழுவினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். ■

கிருஷ்ணகிரி

குழுக்களுக்கு சுழல் நிதி

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் புதிய பேருந்து நிலைய திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பேருந்து நிலையத்தை திறந்து வைத்து பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் மகளிர் திட்டத்தின் சார்பில் 1054 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பொருளாதாரக் கடன், சுழல் நிதி போன்றவற்றை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மாவட்ட ஆட்சியர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கூடுதல் ஆட்சியர் திருமதி. க. லஷ்மி பிரியா, இ.ஆ.ப., மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சரஸ்வதி கணேசன் மற்றும் அரசுத் துறை அலுவலர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் திட்டத்தின் சார்பில் 1054 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பொருளாதாரக் கடன், சுழல் நிதி போன்றவற்றை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

காஞ்சிபுரம்

2075 புதிய மகளிர் குழுக்களுக்கு ரூ. 120 கோடி கடன்

காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரத்தில் புதிய சுய உதவிக் குழுக்களை அமைக்கவும், ரூ. 120 கோடி வங்கிக் கடன் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2390 ஊரக சுய உதவிக் குழுக்கள் மற்றும் 800 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கவும், 373 குழுக்களுக்கு பொருளாதாரக் கடனுதவி அளிக்கப்பட உள்ளது. சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் 3 இடங்களில் கிராம அங்காடிகள் அமைக்கப்படுகிறது. மேலும் 53 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கூடுதல் கட்டிடம் அமைக்க ரூ. 69.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். ■

சென்னை

கூட்டமைப்புகளுக்கு கணிப்பொறி

மகளிர் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வரும், ஈரோடு பிரம்மதேசம் கூட்டமைப்பு, தருமபுரி பிடரஅள்ளி கூட்டமைப்பு, கரூர் தொண்டமாங்கினம் கூட்டமைப்பு, திருவள்ளூர் அயப்பாக்கம் கூட்டமைப்பு, திருவாரூர் திருராமேஸ்வரம் கூட்டமைப்பு, காஞ்சிபுரம் ஊரப்பாக்கம் கூட்டமைப்பு, திண்டுக்கல் என். பஞ்சம்பட்டி கூட்டமைப்பு, விருதுநகர் படந்தால் கூட்டமைப்பு, வேலூர் ஏலகிரி கூட்டமைப்பு, நாமக்கல் இராமாபுரம் கூட்டமைப்பு, திருவண்ணாமலை படவேடு கூட்டமைப்பு, நீலகிரி ஜக்கனாரை கூட்டமைப்பு மற்றும் திருவாரூர் மூன்றாம்சேதி கூட்டமைப்பு ஆகிய 13 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் கணிப்பொறிகளை இலவசமாக வழங்கினார். ■

தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத்தில் வங்கியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மகளிர் திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு பயிற்சியினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். எஸ். சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடன் வழங்க வங்கியாளர்கள் முன்வர வேண்டும் எனவும், மகளிரின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைய மகளிர் குழு மூலம் வங்கியாளர்கள் அதிக அளவு கடன் வழங்க வேண்டும் எனவும் கருத்து கூறப்பட்டது. தற்போது மகளிர் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் அடிப்படை பயிற்சிகள் மற்றும் தொழில் பயிற்சிகள், குழுக்களுக்கு சுழல் நிதி, நேரடிக் கடன் மற்றும் பொருளாதாரக் கடன் வழங்குதல் போன்றவை குறித்தும் இக்கருத்துப் பட்டறையில் விவாதிக் கப்பட்டது. பலரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். ■

திருச்சிராப்பள்ளி

சுழல் நிதி வழங்கும் விழா

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ நிதியமைச்சர் திரு. க. அன்பழகன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை இணை அமைச்சர் திரு. து. நெப்போலியன், பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விழாவில் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் 700 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 4.20 கோடி ரூபாயும், 100 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடனாக 3.88 கோடி ரூபாயும், 200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடனாக 2.51 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது. பொருளாதாரக் கடன் பெற்று செங்கல் தயாரிக்கும் தொழில் மேற்கொள்ளும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு செங்கல் தயாரிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. மேலும் இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி முடித்த 73 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி செய்ய வேலை வாய்ப்பு ஆணைகளும் வழங்கப்பட்டது. ■

நாமக்கல்

மகளிர் சுய உதவிக் குழுவின் பொது சேவைகள்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குருசாமிபாளையம், பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் சிறப்பாக செயல்பட்டு வருவது திருவள்ளுவர் மகளிர் சுய உதவிக் குழுவாகும். இக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குழுவின் வெற்றிக்காகவும், தாங்கள் வசிக்கும் பகுதியின் மேம்பாட்டிற்காகவும், மகளிர் முன்னேற்றத்திற்காகவும் ஒற்றுமையாக செயல்பட்டு வருகின்றனர்.

மரங்கள் நடுதல், சாலைகளை சீரமைத்தல், சுற்றுப்புற சுகாதாரத்தை பேணுதல், பெண்களுக்கான மருத்துவ முகாம்கள், சர்வதேச மகளிர் தினம், உலக சுகாதார தினம், உலகப் புத்தகத் தினம், உலகக் குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம், சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம் போன்றவற்றை நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை வளர்த்து வருகின்றனர். தேசத் தலைவர்களின் புத்தகங்களை இளைஞர்களுக்கு வழங்கி உலகப் புத்தகத் தினத்தை சிறப்பாகக் கொண்டாடினர். ■

காஞ்சிபுரம்

வங்கியாளர்களுக்கான ஆய்வு கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான வங்கியாளர்களின் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பெ. விஸ்வநாதன், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சக்தி பெ. கமலாம்பாள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தில் மகளிர் திட்டத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன், மானியம் மற்றும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் பயிற்சி கையேட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வெளியிட காஞ்சிபுரம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் மகளிர் திட்டம் சார்பாக மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. அனீஸ் சாப்ரா, இ.ஆ.ப., மகளிர் திட்ட அலுவலர் திரு. ஏ. வி. ஞானசேகரன் அவர்கள் முன்னிலை வகிக்க நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் அளித்தல், வங்கிக் கடனுதவிகள், இளைஞர் தொழிற்திறன் பயிற்சிகள் அளிப்பது, முற்றம் இதழுக்கு சந்தா சேர்த்தல் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டன. ■

திண்டுக்கல்

கலந்தாய்வு

மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களை சந்தைப்படுத்தும் தொழில்நுட்ப நுணுக்கங்களில் விற்பனை திறனாய்வு போன்றவற்றை வைத்து ஆராய்ந்து செயல்படுத்தி, முன்னேற்றம் காணும் வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் முதன்முறையாக ஆர்.வி.எஸ். பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரி, பி.எஸ்.என்.ஏ. பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் காந்திகிராமப் பல்கலைக் கழக கல்லூரி ஆகியவற்றில் மேலாண்மை பிரிவில் முதலாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவ – மாணவியர் 299 பேருடன் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 99 பேரும் இணைந்து நடத்திய ஒரு மாபெரும் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் குறித்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. மா. வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் கூறுகையில், இந்த கலந்தாய்வு முயற்சியின் மூலம் மேலாண்மை துறையில் பயிலும் காலத்தில் படிப்புடன் வெளி உலகின் நிஜங்களையும் சந்திக்க முடிகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உற்பத்திப் பொருட்களில் தொழில் நுணுக்கங்களை கற்றுக் கொடுத்து, சந்தைப்படுத்தி, விற்பனையை அதிகரித்தல், அதன் மூலம் மாணவ – மாணவியர்கள் எதிர்காலத்தில் அரசு வேலையையோ, பெரிய பெரிய நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளையோ எதிர்பாராமல் படித்து முடித்தவுடன் சுய தொழில் தொடங்க ஆர்வமும் ஏற்படும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரமும் உயர்வடைந்து அவர்கள் ஒரு தொழில் அதிபராக உருவாகவும் வாய்ப்புண்டு என்றார். ■

> **பெரிய பெரிய** நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை எதிர்பாராமல் படித்து முடித்தவுடன் சுய தொழில் தொடங்க ஆர்வமும் ஏற்படும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரமும் உயர்வடைந்து அவர்கள் ஒரு தொழில் அதிபராக உருவாகவும் வாய்ப்புண்டு என்றார்.

கன்னியாகுமரி

3ஆம் ஆண்டு நிறைவு விழா

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை, மூலச்சல் அன்பு நகரில் ஒய்மா மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மகளிர் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் இக்குழுவின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா சமீபத்தில் நடைபெற்றது. குழுவின் தலைவி திருமதி. விஜயா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஒய்.எம்.சி.ஏ. அமைப்பின் நிர்வாக இயக்குநர் அவர்களும் மற்றும் அப்பகுதியின் பஞ்சாயத்து தலைவர் அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கப்பட்டு அவைகளை நட்டு முறையாக பராமரித்து வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் சுற்றுச்சூழலைக் காக்கும் வகையில் 'பிளாஸ்டிக்கை தவிர்ப்போம், பூமியைக் காப்போம்' என்ற உறுதி மொழியினை விழாவில் கலந்து கொண்ட அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ■

வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆய்வு

தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தும் அனைத்து திட்டங்களையும் முதன் முறையாக காண்பொலி காட்சி (வீடியோ கான்பரன்ஸ்) முறையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

2009–10ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட மகளிர் திட்டப் பணிகளுக்கு மேற் கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்தும், 2010–11ம் ஆண்டில் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல், குழு உறுப்பினர்களுக்கு ஊக்குனர் மற்றும் பிரதிநிதி பயிற்சி அளித்தல், சுழல் நிதி, பொருளாதாரக் கடன் வழங்குதல், படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி வழங்குதல், வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ் கடன் இணைப்புப் பெற்றுத் தருதல் போன்ற மகளிர் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், 32 மாவட்ட திட்ட அலுவலர்கள், 100 உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் 315 வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் காண்பொலி காட்சி (வீடியோ கான்பரன்ஸ்) முறையில் ஆய்வு மேற்கொண்டார்.

2010–11ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் இலக்கை அடைய வேண்டும். புதிய குழுக்களை அமைத்து, அக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு ஊக்குனர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர் பயிற்சி அளித்தல், தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் பெற்றுத் தருதல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மகளிர் திட்டப் பணிகள் தொடர்பான அனைத்து அரசாணைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் படித்துணர்ந்து மகளிர் திட்டப் பணிகளை செயல்படுத்த வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற கூட்டமைப்புகளுக்கு ரூபாய் ஒரு லட்சம் வீதம் ஊக்கத் தொகை வழங்குதல், வங்கிகளில் இருந்து பெருங்கடன் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இளைஞர் தொழில்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு செயல்திட்டப் பணிகளுக்கு ஆலோசனைகளையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார். ■

மகளிர் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், 32 மாவட்ட திட்ட அலுவலர்கள், 100 உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் 315 வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் காண்பொலி காட்சி (வீடியோ கான்பரன்ஸ்) முறையில் ஆய்வு மேற்கொண்டார்.

சங்கத் தமிழ் புலவர்

அவ்வையார்

வேறொரு பணியில் தீவிரமாக இருந்த அதியமான் அவ்வையாரைக் காண கால தாமதமாகி விட்டது. இதனால் கோபமுற்ற அவ்வையார் திரும்பி விட்டார். இதனைக் கேள்விப்பட்ட அதியமான், அவ்வையாரை வழியில் சந்தித்து மன்னிப்புக் கோரினான். நாடாளும் மன்னன் ஒரு சாதாரணக் கிழவியிடம் மண்டியிடுவதைப் பார்த்த அவ்வை, அதியமானின் பண்பைப் பாராட்டி, அவனோடு சென்று பல காலம் அவனது அரண்மனையிலேயே தங்கினார்.

> **அவ்வையாரைப்** பற்றிய வரலாற்று ஆதாரங்கள் இல்லாவிட்டாலும், அவரது பாடல்களை ஒட்டிக் கூறப்படும் இத்தகைய செவிவழிக் கதைகளை வைத்து அவ்வையாரை, நம்மால் ஓரளவிற்குக் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

அவ்வையாரின் தமிழிலும், பாட்டுத் திறத்திலும் மூழ்கித் திளைத்த மன்னன் அதியமான், அவருக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும், அது மிகவும் மதிப்பு வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது, அதிசய நெல்லி மரம் ஒன்றினைக் கண்டான். அபூர்வ மாகக் காய்க்கும் அந்த மரத்தில் ஒரே ஒரு நெல் லிக் கனி காய்த்திருந்தது. அதை உண்டால் நீண்ட நாள் உயிரோடு வாழ முடியும் என்பது அதியமானுக்குத் தெரியும். அந்த நெல்லிக்கனியை அவ்வையாருக்குப் பரிசாக கொடுத்தான்.

இதே அதியமானோடு தொடர்புப்படுத்தி இன்னொரு அவ்வையார் கதையும் உண்டு. ஒருமுறை அதியமானுக்கும், தொண்டைமானுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, இருவருமே போரிடத் தயாராகி வந்தார்கள். இந்த நேரத்தில் அதியமான் அரண்மனையில் தங்கியிருந்த அவ்வைக்கு இது மிகப் பெரிய வேதனையைக் கொடுத்தது. ஆண்மக்கள் போரை விரும்புவதும், பெண் மக்கள் அமைதியை விரும்புவதும் இயற்கைதானே...

அதியமானிடம் சென்று உயிர்ப்பலி வாங்கும் போர் வேண்டாம் என்று அறிவுரை கூறினார். அவ்வையின் அறிவுரையை ஏற்றுக் கொண்ட அதியமான், "எதிரி போருக்குத் தயாராகி வருகிறான், அவனை எப்படி தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்?" என்றான். அதற்கு அவ்வை தானே தூது சென்று போரை நிறுத்துவதாகக் கூறிவிட்டுத் தொண்டைமானிடம் வந்தார்.

எதிரி நாட்டில் இருந்து வந்தாலும் சமாதானத் தூதுவராக வந்த அவ்வையாரை வரவேற்று உபசரித்தான் தொண்டைமான். தனது படைபலத்தைக் காட்டுவதற்காக அவ்வையை அழைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்கைச் சுற்றிக் காண்பித்தான். "தொண்டைமானே உனது ஆயுதங்கள் கூர்மையாகவும், பளபளப்பாகவும் உள்ளன. ஆனால், அதியமானின் ஆயுதங்கள் கூர் மழுங்கி, உடைந்து காணப்படுகின்றன" என்று பொருள்படப் பாடினார். "நீயோ போருக்குப் புதியவன், அதியமான் போரில் வல்லவன்" என்பதை வஞ்சப் புகழ்ச்சியாகக் குறிப்பால் உணர்த்தி, அந்தப் போரை நிறுத்தினார்.

அவ்வையார் வெறும் புலவராக மட்டும் இல்லாமல் மன்னர்கள் மதிக்கும் அளவுக்கு உயர்ந்தவராகவும், போரையே நிறுத்தும் அளவிற்கு செல்வாக்கு மிக்கவராகவும் இருந்திருக்கிறார் என்பதை இந்தக் கதையின் மூலம் அறிய முடிகிறது.

தனிக் கதைகள் என்றில்லாமல் கடவுளோடு தொடர்புபடுத்திக் கூட அவ்வையார் கதைகள் உண்டு. காட்டில் பயணம் செய்து கொண்டிருந்த அவ்வையாரிடம், முருகப் பெருமான் நாவல் மரத்தில் உட்கார்ந்து கொண்டு, சுட்டப் பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டு, அவ்வையின் தமிழோடு விளையாடிய கதை சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். அவ்வையாரைப் பற்றிய வரலாற்று ஆதாரங்கள் இல்லாவிட்டாலும், அவரது பாடல்களை ஒட்டிக் கூறப்படும் இத்தகைய செவிவழிக் கதைகளை வைத்து அவ்வையாரை, நம்மால் ஓரளவிற்குக் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. தமிழறிஞர் பெ. சு. மணி அவர்கள் எழுதிய "சங்ககால அவ்வையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்" என்ற நூலில் அவ்வையாரைப் பற்றிய சில செய்திகளைக் கூறுகிறார்.

> "நீயோ போருக்குப் புதியவன், அதியமான் போரில் வல்லவன்" என்பதை வஞ்சப் புகழ்ச்சியாகக் குறிப்பால் உணர்த்தி, அந்தப் போரை நிறுத்தினார்.

சங்க காலத்தில் அதியமானின் அவைக்களப் புலவராக திகழ்ந்த அவ்வையார் ஒருவர். 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வையார் இன்னொருவர் உண்டு. இவர்தான் அங்கவை, சங்கவை என்ற இரு பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தவர்.

12ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களின் காலத்தில் வாழ்ந்த அவ்வையார்தான் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய நூல்களை எழுதியவர்.

14ஆம் நூற்றாண்டில் சமணர் காலத்தில் வாழ்ந்த ஒரு அவ்வையார்தான் அவ்வைக்குறள், விநாயகர் அகவல் ஆகிய நூல்களை எழுதியவர். இவை தவிர 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளிலும் அவ்வையார் என்ற பெயரில் புலவர்கள் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். ■

நன்றி : பைம்பொழில் மீரான் எழுதிய
"தலைநிமிர்ந்த தமிழச்சிகள்" என்ற நூலிலிருந்து

ஏழை எளியோர் நலம் பெற சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி நல்லிணக்க உணர்வோடு அனைவரும் இணைந்து பாடுபடுவோம்!

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

'நமது இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்ற திருநாள் ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள்! இந்தத் திருநாளைக் காண அந்நிய ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் போராடி இன்னுயிர் தந்தும், இன்னல் தரும் சிறைக் கூடங்களில் சிக்கிச் சித்திரவதைகளுக்கு ஆளாகியும், தியாகங்கள் பல புரிந்த தீரர்களுக்கு இந்நாளில் வீர வணக்கத்தைச் செலுத்திடுவோம்!

பெற்ற சுதந்திரத்தின் பயனாக நமது தாய்த் திருநாடு இன்று உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது. கல்வி வளர்ச்சியிலும், அறிவியல் தொழில்நுட்பத்திலும் உலக நாடுகளுக்கு இணையாக முன்னேற்றம் கண்டுள்ளது. விண்வெளித் துறையில் பல அரிய சாதனைகளை நிகழ்த்தி பிற நாடுகளின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இவையெல்லாம் நாம் பெற்ற சுதந்திரத்தின் பயன்கள்! இத்தகைய பயன்கள் தொடர – ஏழை எளியோர் நலம் பெற – சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி நல்லிணக்க உணர்வுகளோடு அனைவரும் இணைந்து பாடுபடுவோம் என இத்திருநாளில் உறுதியேற்பதுடன்; தமிழக மக்களுக்கு சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்!'

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். ■

பெண்களை தாக்கும் நோய்கள்

பணிக்குச் செல்லும் ஆண்களை விட வீட்டிலிருக்கும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகம் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. அதைப் போலவே ஆண்களைவிட பெண்களே அதிகம் நோய்வாய்ப்படுகின்றனர் என்பது அதிர வைக்கும் உண்மையாகும்.

பெண்கள் தங்களை தாக்கும் நோய்கள் குறித்து அறிந்து அதனை தடுக்கும் வகையில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். ஏனெனில் பெண்களை தாக்கும் நோய்கள் அதிகம்.

ஆண்களை விட பெண்களே அதிக நோய் தாக்குதலுக்கு ஆளாவதால் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் பெண்கள் இருக்க வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக இதயநோய், மார்பகப் புற்று நோய், எலும்பு நொறுங்கச் செய்யும் ஆஸ்டோபோரோசிஸ் என்னும் நோய், டிப்ரஷன் எனப்படும் சோர்வு நிலை நோய் மற்றும் ஆட்டோ இம்யூன் நோய்கள் என்ற நூற்றுக்கும் மேற்பட்ட துணை நோய்கள் பெண்களை பயமுறுத்தி வருகின்றன.

இதய நோய்

ஆண்களுக்குதான் மாரடைப்பு ஏற்படும் என்ற நிலை தற்போது மாறி வருகிறது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் மாரடைப்பால் உயிரிழக்கும் அபாயம் அதிகரித்து வருகிறது. பெண்கள் இறப்பதற்கு காரணமாக உள்ள காரணிகளில் 25 விழுக்காடு இதய நோய்கள் ஆக்கிரமிக்கின்றன. பெண்களின் வாழ்க்கை முறையிலும் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களும், புகை பிடித்தல், புகையிலைப் பொருட்களை பயன்படுத்துதல் போன்றவைகளுக்கு பெண்கள் ஆளாகி வருவதும் இத்தகைய நோய்களின் தாக்குதலுக்கு காரணம்.

பெண்களைத் தாக்கும் நோய்களில் இரண்டாவது இடத்தைப் பெறுவது மார்பக புற்றுநோய் ஆகும். பெண்களை அதிகம் பலிவாங்கும் புற்றுநோய்களின் பட்டியலில் இது இரண்டாவது இடத்தில் உள்ளது. மாதவிடாய் நின்ற காலத்திற்குப் பின்னர் பெண்கள் பலரும் குண்டாகி விடுகின்றனர்.

பெண்களுக்கு சுரப்பிகளின் செயல்பாடுகள் மிக முக்கியம். ஆனால் பழக்க வழக்க மாற்றங்களினால் பெண்களின் சுரப்பிகளின் செயல்பாடும் மாறுகிறது. இதய நோய் ஏற்பட இதுவும் ஒரு காரணமாகிறது.

மார்பக புற்றுநோய்

பெண்களைத் தாக்கும் நோய்களில் இரண்டாவது இடத்தைப் பெறுவது மார்பக புற்றுநோய் ஆகும். பெண்களை அதிகம் பலி வாங்கும் புற்றுநோய்களின் பட்டியலில் இது இரண்டாவது இடத்தில் உள்ளது. மாதவிடாய் நின்ற காலத்திற்குப் பின்னர் பெண்கள் பலரும் குண்டாகி விடுகின்றனர். சுரப்பிகளின் செயல்பாடுகள் அதிகரிப்பதாலும், போது மான உடற்பயிற்சி இல்லாமல் இருப்பதாலும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது.



முப்பது வயதினை நெருங்கும் பெண்கள் சுய பரிசோதனை மூலம் தங்களுக்கு மார்பக புற்றுநோயின் தாக்குதல் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள முடியும். தக்க மருத்துவ ஆலோசனையின் மூலம் இந்நோயினை தவிர்க்கலாம்.

தற்போதைய பழக்க வழக்க மாறுபாடுகளின் காரணமாகவும் பெண்களுக்கு இந்நோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எனவே முப்பது வயதில் ‘மெமோகிராம்’ பரிசோதனை செய்து மார்பக புற்று இருக்கிறதா என்று அறிந்து கொள்வதும், அதன்பின் ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதனை செய்வதும் நல்லது. முப்பது வயதினை நெருங்கும் பெண்கள் சுய பரிசோதனை மூலம் தங்களுக்கு மார்பக புற்றுநோயின் தாக்குதல் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள முடியும். தக்க மருத்துவ ஆலோசனையின் மூலம் இந்நோயினை தவிர்க்கலாம். தற்போது மருத்துவ அறிவியலின் மகத்தான வளர்ச்சியின் காரணமாக மார்பகபுற்று நோய்க்கு சிகிச்சை முறைகள் ஏராளமாக உள்ளன. எனவே பெண்கள் தகுந்த மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு தங்களின் உடல் நலத்தினை காக்க முடியும்.

ஆஸ்டோபோரோசிஸ்

பெரும்பாலான பெண்கள் ஆஸ்டோபோரோசிஸ் என்னும் எலும்பு பாதிப்பு நோய்க்கு ஆளாகி உள்ளனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எலும்புகள் பலவீனம் அடைவதால், இவர்கள் தடுக்கி விழுந்தால் கூட எலும்பு முறிவு சுலபமாக ஏற்படும். முப்பது வயது வரையில் தான் பெண்களுக்கு எலும்புகள் வளர்ச்சி அடையும். அதன் பின்னர் அவர்கள் சாப்பிடும் உணவு வகைகளால்தான் எலும்புகள் திடத்தன்மையை காக்க முடியும்.

பெண்களின் வேலை, மன அழுத்தம், சோர்வு உட்பட பல காரணங்களால் எலும்புகள் அதிகம் தேய்மானம் அடைய வாய்ப்புகள் உள்ளதால் குழந்தைப் பருவம் முதலே எலும்புகள் பாதுகாப்பிற்கு பெண்கள் தனி கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சத்தான உணவுகள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள், குறிப்பாக வைட்டமின் ‘டி’ சத்துள்ள உணவுப் பண்டங்களை சாப்பிடுவது அவசியம்.

டிப்ரஷன்

பெண்களுக்கு ஏற்படும் சோர்வு நிலையே டிப்ரஷன் எனப்படுகிறது. பல்வேறு சூழ்நிலை காரணமாக ஆண்களை விட பெண்களுக்குத் தான் அதிக அளவில் சோர்வு, மன அழுத்தம், பணிச் சுமை போன்றவைகள் ஏற்படுகின்றன. எட்டில் ஒரு பெண் வீதம் மன அழுத்தம், சோர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

எதற்கெடுத்தாலும் பதட்டமடைதல், கவலை, படபடப்பு போன்றவையே டிப்ரஷன் நோய் ஏற்பட அறிகுறிகளாகும். எனவே இந்நோய் ஏற்படாமல் தடுத்துக் கொள்வது பெண்களிடம் தான் உள்ளது. மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுதல், கவலைகளை கண்டுகொள்ளாமல் விடுவது, பொறுமை யாக செயல்களை மேற்கொள்வது போன்றவை இந்நோய் ஏற்படாமல் தடுக்கும்.

ஆட்டோ இம்யூன் நோய்கள்

உடலில் எதிர்ப்புச் சக்திகள் குறைந்து விட்டால், உடல் உறுப்புகளின் செயல்பாடுகள் குறையும். சுரப்பிகளின் செயல்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டு உடல் பலவீனம் ஏற்படும். உடலில் பலவீனம் வந்துவிட்டாலே போதும், வேறு பல நோய்களின் பாதிப்புக்கு நாம் இலக்காக வேண்டிய சூழல் ஏற்பட்டு விடும்.

இப்படி பெண்களைத் தாக்கும் நோய்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் மேற்பட்டவை என உலக சுகாதார மையம் தெரிவிக்கிறது. மேலும் ஆண்களை விட பெண்களே இத்தகு நோய்களின் தாக்குதலுக்கு அதிகம் ஆளாகின்றனர் என்பது கவலைக்குரிய செய்தியாகும். எனவே பெண்கள் தங்களின் உடல் நலத்தைப் பேணி காப்பது அவசியம். சுகாதாரம ான வாழ்க்கைச் சூழல், சத்தான உணவுகள், போதி ய ஓய்வு போன்றவற்றை பெண்களுக்கு அளிப்பது அவசியமாகிறது. ஆணுக்கு நிகராக பெண்களும் சாதனைகள் பல படைக்கும் காலமிது. எனவே பெண்களை தாக்கும் பல்வேறு நோய்களின் பிடியில் இருந்து அவர்களை காப்பது நமது கடமையாகும்.

அறிவியலும், மருத்துவ வசதிகளும் பெருகிவிட்ட இக்காலத்தில் பெண்கள் தங்களின் உடல் நலத்தில் அக்கறை கொண்டு தக்க மருத்துவ ஆலோசனைகளை பெற்று, ஆரோக்கிய நலவாழ்வினை பெற்றிட வேண்டும். ■

விற்பனை

வளர்க வணிகம்

இணைவோம், உழைப்போம், வளர்வோம்
முனைவோம், முயல்வோம், உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின்

மரச்சிற்பங்கள்
சிற்பி ஆண்கள் சுய உதவிக் குழு,
பெரம்பலூர் மாவட்டம்.
செல்பேசி: 94435 91523
விலை: ரூ. 250/- முதல்

அலங்காரத் தட்டுகள்
ஸ்ரீ மகளிர் சுய உதவிக் குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
செல்பேசி: 93626 90033

காகிதக்கூழ் பொம்மைகள்
கடல்கன்னி மகளிர் சுய உதவிக் குழு,
நாகப்பட்டினம் மாவட்டம்.
செல்பேசி: 90941 68251

அழகிய கூடைகள்
ஐஸ்வர்யா மகளிர் சுய உதவிக் குழு,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
செல்பேசி: 95005 42603

அலங்காரப் பொருட்கள்
துளசி மகளிர் சுய உதவிக் குழு,
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி: 94420 53646

கைவினைப் பொருட்கள்
செல்வ விநாயகர் மகளிர் சுய உதவிக் குழு,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்பேசி: 97902 85758

SARAS கண்காட்சியில்

தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்கள்

உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, விற்பனைக் கண்காட்சியில் வைத்திட தரமான உயரிய பொருட்களை தேர்வு செய்தார்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனை கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றன. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பிலும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள் நடைபெறுகின்றன. பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் SARAS என்ற பெயரில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டு கேரள மாநிலம், எர்ணாகுளத்தில் உள்ள எர்ணாகுளத்தப்பன் திடலில் 13.08.2010 முதல் 22.08.2010 வரை SARAS கண்காட்சி நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கு பெறும் இக்கண்காட்சியில் தமிழகத்தின் 16 மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களான பலவண்ண பனை ஓலைப் பொருட்கள், கண்கவர் கைவினைப் பொருட்கள், மூங்கில் மற்றும் சணல் பொருட்கள், மிதியடிகள், தரமான கைத்தறி ஆடைகள், மங்கையர் மனம் விரும்பும் கவரிங் நகைகள், மென்பொம்மைகள், அழகிய பித்தளை சிற்பங்கள், சுவையான உணவுப் பொருட்கள் மற்றும் சுடுமண் சிற்பங்கள் போன்றவற்றை விற்பனை செய்தன. முன்னதாக இக்கண்காட்சியில் கலந்து கொள்ளச் செல்லும் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, விற்பனைக் கண்காட்சியில் வைத்திட தரமான உயரிய பொருட்களை தேர்வு செய்தார். ■

மாநிலங்களில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் SARAS என்ற பெயரில் விற்பனைக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதியத் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து முதியோர்களுக்கும் மாதந்தோறும் ரூபாய் 400/- ஓய்வூதியமாக வழங்கப்படும்.

அளிக்கப்படும் இதர உதவிகள்

ஆண்டுக்கு இரண்டு முறை தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு ஆண்களுக்கு நபர் ஒருவருக்கு ஒரு இலவச வேட்டியும், பெண்களுக்கு ஒரு இலவச சேலையும் வழங்கப்படும்.ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் அன்றாடம் இலவச சத்துணவு வழங்கப்படும். சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களில் மிகவும் வயது முதிர்ந்தவர்களுக்கு அன்னபூர்ணா திட்டத் தின் கீழ் மாதம் 10 கிலோ இலவச அரிசி வழங்கப்படும். இவர்களுக்கு மேலேகண்ட இலவச அரிசி / சத்துணவு வழங்கப்பட மாட்டாது.

தகுதி

வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்த 65 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள முதியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

வட்டாட்சியர் அலுவலகத்தில் உரிய படிவங்களைப் பெற்று அவற்றை பூர்த்தி செய்து அல்லது வெள்ளைத் தாளில் விண்ணப்பப் படிவம் எழுதி, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்/தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆகியோருக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் பெறப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

அணுக வேண்டிய அலுவலர்

வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்பு)

குறைபாடுகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர்

வருவாய் கோட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்

வாழ்ந்து காட்டுவோம்

ரவிச்சந்திரனின் வெற்றிக் கதை »28

சுய உதவிக் குழுவின் தன்னம்பிக்கை »29

தலை நிமிர வைத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் »32

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கனவும் வாழ்வின் மலர்ச்சியும்

- இந்திராணி

திருப்பூர் மாவட்ட சிறப்பு

மாற்றுத் திறனாளி

ரவிச்சந்திரனின் வெற்றிக் கதை

திருப்பூர் மாவட்டம், ஆனைமலை ஒன்றியம், வாழைக்கொம்பு நாகூர் கிராமத்தில் பெட்டிக் கடை வைத்து வாழ்க்கை நடத்தி வரும் மாற்றுத் திறனாளி திரு. ரவிச்சந்திரன், தனது வாழ்க்கைப் பற்றிக் கூறுவதை கேட்போம்.

நான் கடந்த 30 ஆண்டுகளாக மேற்கண்ட கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 36 வயதாகிறது. ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். என்னுடைய ஒரு மகனும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

எனக்கு ஆரம்ப காலத்தில் உடல் நலம் நன்றாக இருந்தது. ஆனால் இடையில் இரத்தக் கொதிப்பு வியாதியால் எனது வலது கை மற்றும் வலது கால் பாதிப்புக்குள்ளாகி விட்டது. இதனால் என்னால் சரியாக வாய் பேசக் கூட முடியாது. இச்சூழ்நிலையில் எனது மனைவியின் கூலி வேலையின் மூலம் கிடைக்கும் வருவாயில் குடும்பம் நடத்தி வந்தேன். அந்தக் காலக்கட்டத்தில் குடும்பத்திற்கு பாரமாகவும் என்னால் எதுவும் சம்பாதிக்க முடியவில்லை என்ற ஆதங்கத்தில் இருந்த எனக்கு கிராமத்தில் சிறிய பெட்டிக்கடை வைக்கலாம் என்ற யோசனை பிறந்தது. அப்போது எனது உறவினரிடம் கடனாக ரூ. 1,000/– பெற்று ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்தேன். அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருவாயில் வாழ்ந்து வந்தேன்.

நான் கடையை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஏக்கத்தில் இருந்தபோது எங்களது கிராமத்திற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. இத்திட்டத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் எனது கடையை விரிவுபடுத்த மனு கொடுத்தேன். சங்க உறுப்பினர்கள் மனுவை பரிசீலனை செய்து தனிநபர் உதவியாக ரூ. 5,000/– வழங்கினார்கள். இந்தத் தொகையோடு எனது சேமிப்புத் தொகையை கொஞ்சம் சேர்த்து மளிகைக் கடையை விரிவுபடுத்தினேன்.

இத்திட்டம் மூலம் எனக்கு உதவி கிடைத்ததால் எனது குடும்ப வருமானம் முன்பு இருந்ததைவிட தற்போது சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ. 100/–லிருந்து ரூ. 125/– வரை கூடுதலாக கிடைக்கிறது. இப்போது நானும் எனது குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம். எங்கள் குழந்தைகளைப் பள்ளியில் படிக்க வைக்கிறோம். என் குடும்ப பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ■

ஆடு வளர்ப்போர் தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 368 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். இக்கூட்டமைப்பிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்ட கூட்டமைப்பு நிதி ரூ. 58.89 இலட்சம் வழங்கப்பட்டு, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நீலவானம் பெண்கள் சுய உதவிக் குழுவின் தன்னம்பிக்கை

எங்கள் குழு 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. குழுவில் உள்ள அனைவரும் அருகில் உள்ள திருப்பூரில் பனியன் நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்கள். அனைவரும் அதிகாலையில் சென்று இரவில் வீடு திரும்பும் நிலையில் இருந்தனர். முதல் ஆறு மாதத்திற்கு பிறகு எங்களுடைய குழுவிற்கு பல்லடம் கனரா வங்கி கிளை மூலம் சுழல் நிதி வழங்கினார்கள். அந்தக் கடனை முறையாகப் பயன்படுத்தி திரும்பச் செலுத்தி வந்தோம். ஒன்றரை வருடம் கழித்து பொருளாதாரக் கடன் பெறும் தகுதியினைப் பெற்றோம்.

> ஏழைகளாகிய எங்களுக்கு ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, நிரந்தர வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

அப்போது குழுவில் உள்ள அனைத்து உறுப்பினரும் சேர்ந்து என்ன தொழில் செய்யலாம் என்று கலந்தாய்வு செய்த போது தெரிந்த தொழிலாகவும், சந்தை வசதி உள்ள தொழிலாகவும், அதற்குரிய அடிப்படை வசதிகள் உள்ள தொழிலாகவும் தேர்வு செய்ய முடிவு செய்தோம். அதன்படி ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்.

விநாயகா கார்மெண்ட்ஸ் என்ற பெயரில் கார்மெண்ட்ஸ் கம்பெனி ஒன்றினைத் துவக்கினோம். சுழல் நிதிக் கடனில் இருந்து 60 ஆயிரம் ரூபாயும், பொருளாதாரக் கடனில் இருந்து 4 இலட்ச ரூபாயும் பல்லடம் கனரா வங்கிக் கிளையில் பெற்றோம். இத்தொகையைக் கொண்டு இயந்திரம் பொருத்தப்பட்ட 10 தையல் இயந்திரங்கள் மற்றும் அது தொடர்புடைய இயந்திரங்களை ரூ. 3,83,000/- மதிப்பில் வாங்கினோம். மீதமுள்ள தொகையை நடைமுறை மூலதனமாகப் பயன்படுத்துகிறோம்.

தற்பொழுது திருப்பூரில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக் கூடிய மற்றும் உள்ளூரில் பயன்படுத்த கூடிய பின்னலாடைகளை தயாரிக்கும் நிறுவனங்களில் வேலை எடுத்து உள்ளூரிலேயே தயார் செய்து தருகிறோம். இதன் மூலம் எங்கள் குழுவில் உள்ள 12 உறுப்பினர்களுக்கும் அலைச்சல் இல்லாமலும், வீட்டிற்கு அருகிலும் நிரந்தரமாக வேலை கிடைக்கிறது. தற்பொழுது ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு ரூ. 1500/- முதல் ரூ. 2300/- வரை ஊதியமாக கிடைக்கிறது. மாதத்திற்கு இதர செலவினங்கள் போக ரூ. 18,000/- முதல் ரூ. 25,000/- வரை சராசரியாக இலாபம் கிடைக்கிறது. இதில் சுழல் நிதிக் கடன் மற்றும் பொருளாதாரக் கடனுக்காக வங்கிக்கு ரூ. 15,000/- செலுத்தியது போக, நிகர இலாபமாக ரூ. 10 ஆயிரம் கிடைக்கிறது.

எங்கள் குழு உறுப்பினர்களுக்கும் 'தாங்கள் ஒரு நிறுவனத்திற்கு சொந்தக்காரர்கள்' என்கிற நம்பிக்கை துளிர் விட்டுள்ளது. தற்போது செய்து வரும் தொழிலை மேலும் விரிவுபடுத்தி, எங்கள் ஊரில் உள்ள அனைத்து குழுக்களிலும் உள்ள உறுப்பினர்களுக்கு உள்ளூரிலேயே வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே எங்கள் இலட்சியம்.

ஏழைகளாகிய எங்களுக்கு ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, நிரந்தர வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி. சாவித்திரி, பிரதிநிதி
நீலவானம் பெண்கள் சுய
உதவிக் குழு,
திருப்பூர் மாவட்டம். ■

இந்திராணியின்

கனவும் வாழ்வின் மலர்ச்சியும்

என்னுடைய அம்மா கூலி வேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் குறைந்த வருவாயில் குடும்பத்தை நடத்தி வந்தோம். எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்ற கவலையிலும், என்னாலும் எதுவும் சம்பாதிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்திலும் இருந்தேன்.

என் பெயர் இந்திராணி. நான் திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், சித்தம்பலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் எலும்புக் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி. எவ்வளவு திறமை இருந்தாலும் போதுமான பண வசதி இல்லாத காரணத்தினால் எந்த தொழிலும் செய்ய முடியாமல் இருந்தேன்.

என்னுடைய அம்மா கூலி வேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் குறைந்த வருவாயில் குடும்பத்தை நடத்தி வந்தோம். எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்ற கவலையிலும், என்னாலும் எதுவும் சம்பாதிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்திலும் இருந்தேன்.

இந்த சமயம் வாழ்ந்து காட்டுவோம் என்ற அருமையான திட்டம் எங்கள் ஊருக்கு வந்தது. அதில் என்னை சிறப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக சேர்ந்து வறுமை ஒழிப்புச் சங்கத்தின் சிறப்பு நிதியிலிருந்து ரூ. 5000/- கடன் கொடுத்தார்கள். அந்தத்

தொகையைக் கொண்டு நான் சிறிய அளவில் ஜவுளி வியாபாரம் செய்ய முடிவு செய்தேன். இரண்டு வாரத்திற்கு ஒருமுறை திருப்பூர் சென்று நானே துணிகளைக் கொள்முதல் செய்கிறேன்.

பின்னர் துணி வியாபாரத்துடன் சுயமாகத் தையல் பழகினால் அதன் மூலம் ஜாக்கட், நைட்டி, பாவாடை மற்றும் குழந்தைகளுக்குரிய ஆடைகள் தைத்துக் கொடுத்தால் வருமானம் கிடைக்கும் என்று எண்ணினேன். என் ஆசையை வறுமை ஒழிப்புச் சங்கத்திடம் தெரிவித்து விண்ணப்பம் செய்தேன். சங்கம் எனது விண்ணப்பத்தைப் பரிசீலித்து தையல் பயிற்சிக்கு அனுப்பியும், திருப்பூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலகத்தி லிருந்து இலவச தையல் இயந்திரத்தையும் பெற்றுத் தந்தது.

இதன் மூலம் துணி வியாபாரத்திற்கு செல்லும் நேரம் தவிர, நான் வீட்டிலிருந்தபடியே ஆடைகள் தைத்தும் கொடுக்கின்றேன். இதன் மூலம் எனக்கு ஒரு நாளைக்கு சராசரியாக ரூபாய் 150லிருந்து ரூ. 200 வரை கிடைக்கிறது.

நான் சங்கத்திடம் பெற்ற கடனுக்குரிய தவணைத் தொகையினை வட்டியில்லாமல் திரும்பச் செலுத்தி வருகிறேன். மேலும் தொழிலை விரிவுபடுத்த குழுவிலிருந்து சுழல் நிதி மற்றும் நேரடிக் கடனிலிருந்து ரூ. 10 ஆயிரம் கடன் பெற்றுள்ளேன். அதையும் முறையாகத் திரும்பச் செலுத்துகிறேன்.

அதுமட்டுமல்லாமல் என் நிலை அறிந்த வறுமை ஒழிப்புச் சங்கம் எனக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை பெற உதவி புரிந்துள்ளனர். தற்போது எனது தாயார் எந்த கூலி வேலைக்கும் செல்லாமல் என்னுடன் எனக்கு உதவியாக இருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது.

யாருமே உதவ மாட்டார்களா என்ற ஏக்கமும், விரக்தியும் இருந்த நிலையில் என் கனவும், இலட்சியமும் மெய்ப்பட சிறப்பாக வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும், திட்டப் பணியாளர்களுக்கும் மிக்க மகிழ்வுடன் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ■

சாரதா மணியின் சந்தோஷமான வாழ்க்கை

என் பெயர் சாரதா மணி, நான் திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், செம்மிபாளையம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். கூலி வேலைக்கு சென்று வந்தேன். அந்த வேலையும் நிரந்தரமாக கிடைக்காது. இந்நிலையில் என்னுடைய பெற்றோர் எனக்கு திருமணம் செய்து வைத்தனர். எனது கணவர் வேன் ஓட்டுனராக பணி புரிந்து வந்தார். எங்கள் இருவரின் வருமானத்தில் வாழ்க்கையை நடத்தி வந்தோம்.

எங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குறைவான வருமானத்தினால் எங்களது குடும்பம் மிகவும் சிரமப்பட்டது. இச்சூழலில் குழந்தையை எவ்வாறு படிக்க வைப்பது என்ற மனக்குழப்பத்தில் இருந்து வந்தோம்.

இந்த நிலையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு எங்கள் பகுதியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத் தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட அருள் மகளிர் சுய உதவிக் குழுவில் நான் உறுப்பினராக இணைந்தேன். சேமிப்பு என்பதையே அறிந்திராத எனக்கு குழுவில் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தினர்.

பின்னர் எங்கள் குழு சுழல் நிதிக் கடன் பெற்ற பிறகு, தானும் ஏதாவது தொழில் செய்யலாம் என்ற எண்ணம் தோன்றியதால் எனது கணவருடன் சேர்ந்து ஆலோசித்தேன். அப்போது கடன் வேண்டாம் என்று முடிவெடுத்தோம்.

எங்கள் குழு பொருளாதாரக் கடன் பெற்ற பின்பு குழுவிலிருந்து பெற்ற 25 ஆயிரம் ரூபாய் கடன் தொகை மற்றும் நாங்கள் சேமித்து வைத்திருந்த ரூ. 10 ஆயிரம் ஆகியவற்றை மூலதனமாக தனியார் நிதி நிறுவனத்தில் கடன் பெற்று, மினி வேன் ஒன்றினை சொந்தமாக வாங்கி, அதில் எனது கனவரே ஓட்டுநராகப் பணி புரிந்து வருகிறார். தற்போது மினி வேன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடனை திருப்பிச் செலுத்தியது போக சொந்தமாக நிலம் ஒன்றினையும் வாங்கியுள்ளோம். எதிர்காலத்தில் சொந்தமாக வீடு கட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

எங்கள் வாழ்வில் வளர்ச்சிக்கு வித்திட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றியினைத் தெரிவிக்கின்றோம். ■

திருப்பூர் மாவட்ட சிறப்பு

முருகனை தலை நிமிர வைத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியம், ஆத்துக் கிணத்துப்பட்டியைச் சேர்ந்தவர் முருகன். இவருக்கு வயது 28. இவரும், இவர் தம்பியும் தேங்காய் உரிக்கும் தொழில் செய்து பிழைப்பு நடத்தி வந்தனர்.

தனது தம்பியையும் இவரின் சொந்த செலவிலேயே இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெற வழிவகை செய்துள்ளார்.

இந்நிலையில் இவருடைய பெற்றோர் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினர். ஆனால் நிரந்தர வேலையில்லாத காரணத்தால் இவருக்குப் பெண் தர மறுத்தனர். மனமுடைந்த முருகன் நிரந்தர வேலையை தேடினார்.

அந்த நேரத்தில் அக்கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அந்த அமைப்பின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள ஏழை இளைஞர்களுக்கு அவர் களின் விருப்பம் மற்றும் கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது என்பதை தெரிந்து கொண்ட முருகன், தனக்கு இலகுரக வாகன ஓட்டுநர் உரிமப் பயிற்சி மற்றும் ஓட்டுநர் வில்லை பெற்றுத் தர வேண்டி வறுமை ஒழிப்புச் சங்கத்தில் மனு செய்தார்.

சங்கம் முருகனின் மனுவைப் பரிசீலித்து, அவர் விரும்பிய பயிற்சியினை அளித்தது. பயிற்சிக்குப் பின் தனியார் ஒருவரின் வணிக வாகனத்தை கடந்த இரண்டு வருடங்களாக ஓட்டி வருகிறார்.

முருகனுக்கு நிரந்தர வருமானம் கிடைத்தவுடன், அவரின் உறவினர்களில் பலர் இவருக்குப் பெண் கொடுக்க முன் வந்தனர். தற்போது நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார். தற்போது இவருக்கு மாத ஊதியமாக ரூ. 9 ஆயிரம் கிடைக்கிறது.

தனது தம்பியையும் இவரின் சொந்த செலவிலேயே இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெற வழிவகை செய்துள்ளார்.

தனது வயதான பெற்றோரையும் பாதுகாப்பாக பார்த்துக் கொள்கிறார். இதற்கு வழிவகை செய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும், வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தனது உயிர் இருக்கும் வரை நன்றியுள்ளவனாக இருப்பேன் என்று கூறுகிறார். ■

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd., 100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (64,200 copies circulated) an printed by C. JABAMANI. CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்களை 16.07.2010 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலாளராகவும் மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள திரு. **கா. அலாவுதீன்.** இ.ஆ.ப., அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

வாழ்த்தி வரவேற்கிறோம்...!

முத்தமிழ் வித்தகர்
மூத்த தமிழறிஞர்
எம் மொழிக்கு ஈடு
எம் மொழியே என
செந்தமிழ் மொழியை
செம்மொழியாக்கி - உலகத் தமிழ்ச்
செம்மொழி மாநாடு கண்ட
தமிழ்த்தாயின் தலைமகன்
தனி அலுவலராய் பதவி தந்தார்
தங்களுக்கு,
நனி சிறக்க, நற்றமிழ் மாநாடும் சிறக்க
இனி இல்லை இதற்கு எல்லையென
நல்ல பணிதனை ஆற்றி - கலைஞர்
உள்ளம் மகிழச் செய்திட்டீர்!
உள்ளாட்சியில் நல்லாட்சி தொடர,
ஊராட்சியில் உங்கள் பணி சிறக்க,
காலமெல்லாம் புகழ் பரப்பும்,
கலைஞர் வீடு வழங்கும் திட்டமும்,
மகளிர் மாண்பினை போற்றும்
மகளிர் திட்டமும் முன்னோர் வழியில்
எந்நாளும் தொடர்ந்திடவே,
வந்திட்ட உங்களை வாழ்த்தி
வரவேற்கிறோம்!

- தமிழ்நாடு மகளிர்
நல மேம்பாட்டு நிறுவனம் *மற்றும்*
முற்றம் - மகளிர் மாத இதழ்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2282/2004
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11